Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 கார்த்திகை (29 - 11 - 1990) வியாழக்கிழமை ஓசை 274

## போராளிகள் நிழற்படங்களை தந்துதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் மாவீரர்நாள் புகைப்படக் கண்காட்சியில் வீரமரணமடைந்த போராளிகளின் உருவப்படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒருசில போராளிகளின் புகைப்படங்கள் கைவசம் இன்மையால் இந்தக் கண்காட்சியில் அவற்றைச் சேர்க்க முடியவில்லை. எனவே வீரமரணமடைந்த இந்தப்போராளி (4 ஆம்பக்கம் பார்க்க)

### வன்னிப் பிரதேசத்தில் பரவலான விமானத் தாக்குதல்

# ஒட்டுசுட்டானில் ஒன்பது பேர் விமானக் குண்டு வீச்சிற்கு பலி

## கோயில்கள், பாடசாலைகள் சேதம்

(ஒட்டுசுட்டான்)

வன்னிப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படையினர் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தக் குண்டுவீச்சால் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், கோயில்கள், பாடசாலைகள், வீடுகள், கடைகள் என்பன சேதமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒட்டுசுட்டானில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவிலும், மகா வித்தியாலயமும் முற்றாகச் சேதமடைந்தன.

இத் தாக்குதலில் மகாலிங்கம் வாப்பா (வயது 27) முள்ளியவளை, தம்பிராசா செல்வராசா (வயது 21) கற்சிலைமடு, செலவின் விக்னேஸ்வரன் (வயது 23) புதுக்குளம், அருணாசலம் (வயது 65) மாங்குளம், அருணாசலம் கவிதா (வயது 12) மாங்குளம், தங்கராசா சிவதரன் (வயது 12) ஒட்டுசுட்டான், சுப்பிரமணியம் கவிதன் (வயது 23) ஒட்டுசுட்டான், வேலுப்பிள்ளை சிவறஞ்சினி (வயது 13) முள்ளியவளை, மகேந்திரன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை நோக்கி மக்கள் கூட்டம்

நேற்றும் யாழ். கோட்டையை பார்வையிட ஏராளமான மக்கள் கூடியபோதிலும் உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இப்போதைக்கு மக்களை உள்ளே அனுமதிக்க முடியாது என அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போராளிகள் தெரிவித்தனர். (லோ)

## சமாதானம் நிலவுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

### தமிழ்நாட்டு திருச்சபையினர் கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் சமாதானத்தை நிலவச்செய்ய சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை திரட்டும் வகையில் பயன்பொருத்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ திருச்சபைகளின் பிரபலஸ்தர்கள் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்கள்.

சென்னை ஆயர் அதி. வண. சி. ஞானாதிக்கம், தென் இந்திய திருச்சபை ஆயர் அதி. வண. எம். அஸரையா, இளைப்பாறிய ஆயர் அதி. வண. தேவராக் பீற்றர் உட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தங்கம் ஒப்படைத்தது போன்று தமிழீழத்தை ஒப்படைப்போம்

### - பல்கலைக் கழகத்தில் யோகி உரை

(யாழ்ப்பாணம்)

எமது மக்களிடம் இருந்து இரண்டு பவுண் தங்கம் கடனாக பெறுகிறோம். அதை மீண்டும் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கிறோம். இதே போன்று சுதந்திர தமிழீழத்தை நாம் வென்றெடுத்து எமது மக்களிடம் கொடுக்கப் போகிறோம். அதை நாம் திரும்ப அவர்களிடம் இருந்து பெறப்போவதில்லை.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைகழகத்தில் நடைபெற்ற மாவீரர் இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் திரு. யோகி கூறினார்.

இவ்வைபவத்தில் தமிழீழ விடுதலைக்காக போராடி உயிர்த்தியாகம் செய்த போராளிகளின் புகைப்படக் கண்காட்சியை யாழ். மாவட்டத் தளபதி திரு. பானு திறந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை மீது ஷெல் தாக்கு

மாவீரர் நாளான 27 ஆம் திகதி அதிகாலை 12.01க்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் மணி ஒலித்த சில வினாடிகளில் காங்கேசன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்புதியஉக்தியைக்கையாண்டு மாங்குளம் முகாமைத் தாக்கினர்

### - பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன்

(கொழும்பு)

மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் புதியதந்திரத்தைக் கையாண்டதாலும், படையினர் விட்ட தவறுகளினாலுமே முகாமை கைவிடவேண்டி ஏற்பட்டது என சிறிலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் புலிகள் தாக்குதல் மேற்கொண்ட போது மாங்குளம் இராணுவ முகாமில் பதினொரு அதிகாரிகள் உட்பட 291 இராணுவத்தினர் இரு பிரிவுகளாக இருந்தனர் எனவும் தெரிவித்தார்.

சண்டை தொடங்கிய இரு நாட்களிலும் விமானப்படையினருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்பு இருந்ததாகவும் பின்னர் ஏற் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிபர் கொழும்புடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

மீண்டும் நேற்று மதியம் இரண்டுமணியளவில் யாழ். அரச அதிபர் கொழும்புடன் தொடர்புகொண்டு அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் பேசினார்.

வடமாகாணத்தில் உள்ள இலங்கைவங்கிக்குத் தேவையான பணம் மற்றும் அத்தியாவசிய சேவைகளின் நிலைமை பற்றியும் அவர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொண்டார்.

## பலாலி ஷெல்லினால் சுன்னாகத்தில் பலர் காயம்; வீடுகள் கடைகள் சேதம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியில் சீ-பிளேன் றேசர் குண்டுத் தாக்குதல் நடாத்திச் சென்ற சில நிமிடங்களில் பலாலியிருந்து ஏவப்பட்ட ஒன்பது ஷெல்கள் சுன்னாகச் சந்தையின் 50 மீற்றர் சுற்றளவிற்குள் வீழ்ந்து வெடித்ததில் பொதுமக்கள் பலர் படுகாயமடைந்ததுடன் அகதிமுகாம், தேவாலயம், வீடுகள், கடைகள் என்பன பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் சுன்னாகம் சந்தைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் விமானமான சீ-பிளேன் ஒன்று நடாத்திய றேசர் குண்டுத் தாக்குதலில் அதேயிடத்தைச் சேர்ந்த ப.பு (26) என்பவர் படுகாயமடைந்தார். விமானம் இப் பகுதியை விட்டுச் சென்ற சில நிமிடங்களில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஒன்பது ஆட்டிலறி ஷெல்கள் இப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத் தாக்குதலின்போது அகதிகள் முகாமாகப் பயன்படுத்தப்படும் புனித அந்தோனியார் ஆலயத்தில் வீழ்ந்த ஷெல்லினால் அங்கு தங்கியி (4 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாக சீ-பிளேன் தாக்குதல்; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல பாகங்களிலும் நேற்றும், நேற்று முன்தினமும் சீ-பிளேன் பரவலான தாக்குதலை மேற்கொண்டது. இந்தத் தாக்குதலில் பல பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

**மாதகல்**

மாதகல் பகுதியில் கூடியிருந்த பொது மக்கள் மீது சீ-பிளேன் மேற்கொண்ட கலிபர் தாக்குதலினால் நால்வர் படுகாயமடைந்தனர். கட்டடங்கள் சேதமடைந்தன. சிதறி ஓடிய மக்களின் கால்களிற்கிடையில் அகப்பட்ட இளம் பெண்ணும் படுகாயமடைந்தார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பரீட்சை யாழ். பல்கலை. சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நிலவும் போராட்ட சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி 400க்கும் மேற்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் தென்பகுதியில் தமது பரீட்சைகளை வைக்குமாறும் பேராதெனியா மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சான்றிதழ்களை தமக்குத் தரும்படியும் விண்ணப்பித்திருந்தனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**பழைய புத்தகங்கள்**

நாளாந்தம் திறந்திருக்கும் பழைய புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சில்லறைக் கடைகளுக்குரிய கடதாசி வகைகள் வாங்கப்படும் விற்கப்படும்
Second Hand Book House
13/6 ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன்லேன், யாழ்ப்பாணம்.

(R- 871)

**நியூ வீனஸ்**
**NEW VENUS**

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60, ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களும், பற்றறிகளும் விற்பனைக்குண்டு. கிளை ஸ்தாபனம்: 153A, பலாலி வீதியிலும் நடைபெறுகின்றது.

(B/1586)

**தவறிவிட்டது**

சந்நிதி பத்தைமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த இலக்கம் 506094089 V இராசையா நாகேஸ்வரி என்பவருடைய அடையாள அட்டை உட்பட மூவருடைய உணவு முத்திரைகளும் 19-11-90 அன்று ஆனைக்கோட்டை சந்தியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராசையா நாகேஸ்வரி, சந்நிதி பத்தைமேனி அச்சுவேலியில் ஒப்படைக்கவும்.

(B /1632)

## வானில் வெளிச்சக் கூடு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நிகழ்ச்சியின் நிறைவைக் குறிக்கும் முகமாக வெளிச்சக்கூடு ஒன்று வானில் பறக்க விடப்பட்டது. சுமார் 200 அடிக்கும் மேலான உயரத்தில் இந்த வெளிச்சக்கூடு வானில் மிதந்து வந்ததை ஆங்காங்கே கூடியிருந்த மக்களும், வீடுகளிலிருந்தோரும் கண்டு களித்தனர். நேற்று முன்தினம் சுமார் ஏழு மணியளவில் இந்த வெளிச்சக் கூடு நல்லூர்ப் பகுதியிலிருந்து கோட்டைப் பகுதியைநோக்கி வானில் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

## சமூகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்க, தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தினரையும் ஏனைய கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களையும் 30-11-1990 நாளைவெள்ளிக்கிழமைநண்பகல் 12 00 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நிர்வாக செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி மாதிரி நிர்வாக செயலகத்தின் கூட்டுறவுத் துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## போராளிகள் பெயரில் குடியிருப்புக்கள்

(குருநகர்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு போராளிகள் பெயரைக் கொண்ட இரு குடியிருப்புக்கள் நேற்று முன் தினம் (27-11-90) மாலை திறந்து வைக்கப்பட்டன.

குருநகர் தொடர் மாடிப் பகுதி லெப். வாசன்நகர் என்றும், புதிய வீடமைப்புப் பகுதி லெப். புலேந்திநகர் என்றும் பெயர் சூட்டப்பட்டன.

## மக்கள் வங்கி அறிவித்தல்

''மக்கள் வங்கியிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களினதும், மரணித்த உத்தியோகத்தர்களின் மனைவிமாரினதும், ஒய்வூதிய வவுச்சர்கள் மக்கள் வங்கி யாழ்/ பிராந்திய தலைமை அலுவலகத்தை வந்தடைந்துள்ளன. இவற்றிற்குரியவர்கள் மேற்படி அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளும்படி பிரதேச முகாமையாளர் வேண்டுகின்றார்.''

பிரதேச முகாமையாளர்.

(B/ 1635)

## A/L 90, 91

**வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்**
**02–12–1990 காலை 9-00 மணி**

## A/L 92

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(எமது வழமையான சிறப்பான ஆசிரியர் குழுவினரால்)

**New Master Institute**

B.M.C, லேன், யாழ்ப்பாணம்.

(B. 1633)

## ஓராண்டு நினைவஞ்சலி

ஈழ மண்ணில் 02 | 06 | 1962



அரக்கர் கையில் 09 | 12 | 1989

### செல்வன் கணபதி செல்வநாயகம்

திதி: 29–12–1990

ஓராண்டு சென்ற இன் நாளிலே என்ன
பதைபதைத்தாயோ?— எங்கள் செல்வமே!
வருடம் ஒன்றாகிவிட்டதடா நின் நினைவால்
எம் இதயம் வாடுதடா!!
செல்வமே! உன் இதயம் அமைதி கொள்ள
இறைவனை நாம் கண்ணீரால் வேண்டுகின்றோம்.

இவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
தந்தை, சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

கைதடி மத்தி,
(R. 867)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் திரு. சண்முகம் - ஞானப்பிரகாசம் அவர்கள்**

(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவரும்)

இவர் கூட்டுறவின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த உத்தமர், தன்னலமில்லா தனிப் பெரும் தலைவர். மக்கள் சேவைக்காக தன்னையே அர்ப்பணித்த மகத்துவர். சிக்கன சேமிப்பு கடனுதவு சங்கத்திற் சீரிய செயலாற்றிய செயல் வீரர். ஏழை மக்களின் துயர் துடைத்த தூயவர்.

முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவருமான உயர் திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களுக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புங்-நயி பல. நோ. கூ. சங்க
பணியாளர்களும், பணிப்பாளர்களும்
புங்-நயி ப. நோ. கூ. சங்க
பணியாளர் சிக்கன சேமிப்பு கடனுதவு சங்கமும்.

(R/882)

## வீதியில் உறங்கியவர் மீது பஸ் ஏறிச் சென்றது

(யாழ்ப்பாணம்)

அருகுவெளி வீதியோரத்தில் படுத்துறங்கிய ஒருவர் மீது பஸ் ஏறிச் சென்றுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து தேங்காய் மூடையுடன் இரவு நேரம் வந்து கொண்டிருந்த ஆ. பத்மநாதன் (வயது 34) என்பவர் அருகுவெளி வீதியில் வரும்போது சைக்கிள் காற்றுப்போகவே அவ் வீதி ஓரத்தில் படுத்துறங்கியபோது அவரின் காலின் மேலாக பஸ் ஒன்று ஏறிச் சென்றது. இதனால் பலத்தகாயமடைந்த நிலையில் இவர் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### காத்தன் வேலன்

(சரவணை கிழக்கு, வேலணை)

பிறப்பு: 07–05–1909 இறப்பு: 30–10–1990

ஆத்மா சாந்தி அடைவதாக!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 29-11-90 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
K. சின்னத்தம்பி, பூனாறிமரத்தடி, நாச்சிமார்கோயிலடி.
V. ஐயம்பிள்ளை (மணி)

(R-874)

## வீரமரணம்

மண்ணின் மடியில் 09 | 12 | 1963



மண்ணின் மீட்பில் 23 | 11 | 1990

### வீரவேங்கை மாரியாச்சி

**(குணசிங்கம் அருள்மொழி)**

(சிந்தனா, மாரியாச்சி)

மாங்குளம் பிரதான படைமுகாம் தகர்ப்பில்
பங்கு கொண்டு போராடி
வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர் குணசிங்கம், மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வியும் தாமரைச்செல்வி, இளங்குமரன், (வீரவேங்கை தென்றல்) தேன்மொழி, ஸ்ரீவள்ளி, கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நா. இராஜேந்திரனின் அன்பு மைத்துனியும் திருமதி மாரிமுத்து நாகரத்தினத்தின் அன்புப் பேர்த்தியும் பிரணவனின் அன்புச் சித்தியுமாவார். இவரது இல்லத்தில் நிகழ்ந்த நினைவஞ்சலி நிகழ்ச்சியிற் பங்குகொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

16/2 கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(R/883)

### சிந்தனைக்கு

உன் அருகாமையில் உள்ள
கடமையை உடனே ஆற்றிமுடி
- யொஹன் கேத்கே


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்:025-2839 நிர்வாகபீடம்:2208
த.பெ.எண் 05


## கடமை தவறுவோருக்கு உரிமையில் பங்கில்லை

யாழ். பல்கலைக்கழகம் இன்று எதிர்நோக்கும் சில நெருக்கடிகளால் அதன் வளர்ச்சியில் பெரும் முட்டுக்கட்டைகள் தோன்றியுள்ளதாக அறிய முடிகின்றது.

யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது இந்தப் பல்கலைக்கழகம் தமிழ்த் தேசிய உணர்ச்சிக்கு வித்திடும் ஒரு பல்கலைக்கழகமாக உருப்பெறும் என சிலரால் அரசாங்கத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. அதே வேளை இந்தப் பல்கலைக்கழகம் தமிழ்த்தேசியப் பல்கலைக்கழகமாக உருவாகும் என தமிழ் மக்கள் பலராலும் எதிர்பார்க்கவும் பட்டது. ஆனால் அரசியல் நெருக்கடி காரணமாக பல்கலைக்கழகத்தை நிறுவிய சிறிலங்கா அரசாங்கம் அந்த பல்கலைக்கழகவளர்ச்சியில் பெரியளவு அக்கறைகாட்டாமல் விட்டுவிட்டது.

அரசாங்கத்தின் இந்த வெற்றுமையை யாழ். பல்கலைக்கழகத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட ருகுண பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைக் கொண்டு மதிப்பிடலாம்.

அரசாங்கமும் தமிழரும் எதிர்பார்த்தது போன்றே 1977ஆம் ஆண்டு இனக்கலவரத்துடன் யாழ். பல்கலைக்கழகம் தமிழ் பேசும் மக்களின் பல்கலைக்கழகமாக மாறியது. ஆனால் இந்தப் பல்கலைக்கழகம் தமிழ் மக்கள் எதிர்பார்த்தஅளவில் அதன் வளர்ச்சி இடம் பெறுகின்றதா என்பதையிட்டு கேள்விகள் எழுந்துள்ளன.

பல சிரமங்களின் மத்தியில் இன்று விவசாயபீடமும், பொறியியல் பீடமும் அமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து அனுமதிகள் பெறப்பட்டுள்ள போதிலும், முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பல பீடங்களை கொண்டு நடத்துவதிலேயே சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இதற்கு சிறப்பான உதாரணமாக மருத்துவபீடம் உள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இணைபத்திரிகைகளில் வரும் தொடர்ச்சியான விளம்பரங்களும் உறுதி செய்வனவாகவுள்ளன. இந்தநிலையினால் தான் இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்களை வேறு தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றும்படி கோருகின்றார்கள். இதன் காரணமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் எதிர்காலநிலை என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு குறிப்பாக மருத்துவ பீடத்திற்கு இந்த நெருக்கடி நிலைமை தோன்றியமைக்கு ஓரளவேனும் மண்மீதான பற்றும், இனப் பற்றும் இல்லாத வைத்தியர்களை உருவாக்கியதே காரணமாகவும்.

இம்மருத்துவ பீடத்திற்குத் தேவையான வைத்திய துறையைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள் மத்தியில் இல்லாமல் இல்லை. வடக்கில் ஒரு தனியார் மருத்துவ கல்லூரியை இயக்குவதற்கும் பெரியளவில் தனியார் மருத்துவ மனைகளை நடத்துவதற்கும் முயற்சித்தவர்கள் பல்கலைக்கழகத்தில் சேவை செய்யத் தயாராகவில்லை. அதாவது பணம் சேர்ப்பதில் ஆர்வம் உள்ளதே தவிர வேறு சிந்தனைகள் அவர்கள் எண்ணத்தில் இல்லை.

மேலும் பல்கலைக்கழகத்தில் ஏனைய பீடங்களுக்கு ஓரளவேனும் விரிவுரையாளர்கள் இருக்கும் பட்சத்தில் வைத்தியர்கள் சமூகத்தில்மட்டும் இந்தநிலை இருப்பதற்கு வைத்தியர்களுக்கு சமூகத்தில் கொடுக்கப்பட்ட அபரிமிதமான சமூக அந்தஸ்தும் ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

வைத்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சமூக அந்தஸ்து அவர்களை தாங்களும் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என எண்ணவைக்கவில்லை. இந்த மண்ணின் வளமே தங்களைப் படித்துப் பட்டம் பெற வைத்தது என உணர வைக்கவில்லை. தன்னை வளர்த்து விட்ட மண்ணுக்கு தான் கடமைப்பட்டவன், அதற்கு தான் கடமை செய்ய வேண்டியது தமது கடமை என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலை இனிமேலும் தொடரக்கூடாது; இந்த மண்ணின் வளத்தை பயன்படுத்திபடித்துப் பட்டம் பெறுபவர்கள் இந்த மண்ணுக்குச் சேவை செய்ய முன்வரவேண்டும். அவ்வாறு செய்ய முற்படாதவர்கள் இந்த மண்ணின் வளங்களைப் பயன்படுத்தும் அருகதை அற்றவர்கள். அத்துடன் இன்றைய பொழுதுகளில் இந்த மண்ணில்வாழும்மக்களுக்குசேவையாற்ற முற்படாதவர்கள் இந்த மண்ணின் பேரால் கிடைக்கும் அங்கீகாரத்தையும் அடையாளத்தையும் பயன்படுத்த வெட்கித் தலைகுனிய வேண்டும்.

## இழப்பின் மூலம் இணைந்தவர்களுடன்......

நான் ஒரு முன்னாள் கைதி. இந்திய இராணுவத்தின் சிறையில் ஒன்றரை வருடங்கள் அடைபட்டிருந்தவன். இந்த ஒன்றரை வருட காலத்தில் பல சம்பவங்களைப் பார்த்திருக்கிறேன். அறிந்திருக்கிறேன் நீங்கள் மட்டும் தான் போராளிகளல்ல; உங்களை ஈன்றெடுத்த நாங்களுமே போராளிகள் தான், நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணியையே இங்கே படைக்கப்படுகிறது. உலகின் எல்லா வரலாறுகளும் மறைந்த பின்னரே தோண்டி எடுக்கப்படுவது போல் இவர்களும் சாகும் வரை காத்திருக்கப் போகிறீர்களா? பாடுங்கள் பரணிகளை. பிறக்கட்டும் புதிய புறநானூறு'' என்றெல்லாம் கத்த வேண்டும் போலிருந்தது...எமது மாவீரர்களின் பெற்றோர்கள் போதியளவு

சமயத்தைத் திறந்து அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்தார்கள் போராளிகள்.

நாடகங்கள், வில்லிசை, போராட்ட நிகழ்வுகள் பற்றிய வீடியோ திரைப்படங்கள் மற்றும் பல நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெற்றன. சுற்றிப் பார்த்தபடியே வந்தேன். எதிரே எனது சிறைச்சகா ஒருவர் தென்பட்டார். இவர் மயிலிட்டியைச் சேர்ந்தவர். பெயர் திருநீலகண்டன். மகள் இயக்கத்திற்கு சென்றதற்காக 1 1/2 வருடம் இவரைச் சிறையில் வைத்திருந்

நாங்களும் செய்கின்றோம் என்று தமது மண்பற்றை போராளிகளின் பெற்றோர் நிருபித்த சம்பவங்கள் பல.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு போராளி. அவன் சிறையில் இருந்தான். அதேநேரம் அவனது தம்பி களத்தில் போராடிக்கொண்டிருந்தான். தகப்பன் இல்லை குடும்பவருமானத்தை தாய் மட்டுமே கவனித்துக் கொள்ள வேண்டும். ஒரு நாள் இவனுக்கு (அண்ணன்) ஒரு செய்தி கிடைத்தது. அவனது தம்பி கிளிநொச்சியிலே இந்திய இராணுவத்துடன் மோதி வீரமரணமடைந்து விட்டான் என்று. சில நாட்கள் செல்ல இவனுக்கு "விசிற்" வந்திருக்கிறது என்று அறிவித்தார்கள். இவனுக்கோ சங்கடம். நானும் சிறையில் இருக்கிறேன். தம்பியும் இறந்துவிட்டான். இன்று என்னைச் சந்தித்தவுடன் அம்மா கத்திக் குழறப்போகிறார். எப்படித்தான் சமாளிப்பது? இப்படியான சிந்தனைகளுடனே தாயைச் சந்திக்கப் புறப்பட்டான்.

இவனது இலக்கம் கூப்பிடப்பட்டு இவன் அழைக்கப்பட்டான். தாய் வந்தாள். தமிழ் தெரிந்த இந்திய இராணுவத்தினனும் அருகில் சென்றான். இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய என்னென்ன விடயங்களைக் கதைக்கப் போகிறார்களோ என்று எண்ணியபடியே அவனும் இருந்தான். தாயும் மகனும் கதைக்கத் தொடங்கினார்கள். ஒரு நிமிடம், இரண்டு நிமிடம்... தம்பியாரின் பேச்சையே எடுக்கவில்லை தாய். ஒரு வேளை இன்னும் அம்மாவுக்குத் தெரியாதோ? மெல்ல தம்பியின் பேச்சை எடுத்தான் அண்ணன். ''அம்மா தம்பி...'' ''அட போடா'' அவன் என்ன வருத்தம் வந்தோ செத்தவன். சண்டையிலதானே செத்தவன் மண்ணுக்காக செத்தவனுக்காக நான் மனவருத்தப்படயில்லை. சந்தோசமாய்த்தான் இருக்கிறேன். ஒரு மகன் வீரனாய்ச் செத்தான். என்ரை கவலையெல்லாம் மற்றவன் ஒரு கைதியாய் இருக்கிறான் என்டது தான்'' என்று பெருமிதத்துடன் கூறினாள் தாய்.

தாயை எப்படிச் சந்திக்கப் போகிறேன் என்று பயந்தபடியே போன அவன் தான் கொண்டு போன பையைச் சுழற்றியபடியே சந்தோஷமாகத் திரும்பினான். எங்களுக்கோ ஆச்சரியம். அவனை அணுகினோம். அவனும் நடந்ததைக் கூறினான். புறநானூற்றில் உள்ள சம்பவமொன்று நினைவுக்கு வந்தது. தனது மகன் புறமுதுகில் காயமடைந்து இறந்தான் என்று கேள்வியுற்ற தாய், அவன் அவ்வாறு புறமுதுகில் காயமடைந்து இறந்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய அங்கத்தை வெட்டி எறிவேன் என்று கூறி விட்டு, போர்க்களம் சென்றிருந்த அவன் மார்பிலே தான் ஈட்டி பாய்ந்தது என்பதைக் கண்டு தன் மகன் வீரன் தான் என்று பெருமைப்பட்டாள். அந்தப் புறநானூற்றுத் தாய் என் நினைவில் வந்தாள். ''நாம் வெற்றியடைந்து விட்டோம், போராட்டம் கூர்மையடைந்து விட்டது. ஓ...கவிஞர்களே! புதிய புறநானூறு ஒன்று

கௌரவிக்கப்படவில்லையே என்ற ஏக்கமும் இருந்தது.

இவ்வருடம் மாவீரர் வாரத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள் என்றறிந்து அங்கே சென்றேன். கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் பெற்றோர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அங்கே சென்றேன். பல மாவீரர்

தனர் இந்திய இராணுவத்தினர்.

இவரது மகள் கப்டன் பிரபா 23-07-90 அன்று பரந்தனில் நடைபெற்ற மோதலொன்றில் வீரமரணம் அடைந்துவிட்டாள். ஆகவே எனது முன்னாள் சிறைச்சகாவை மாவீரரின் பெற்றோர் என்ற நிலையில் சந்திக்க வேண்டியிருந்தது.

### இந்தியச் சிறையில் இருந்த ஒரு முன்னாள் கைதியின் பார்வையில்....

களின் பெற்றோர்களைக் கண்டேன். எமது பிள்ளையும் உயிரோடிருந்தால் இப்படித்தானே கம்பீரமாக வருவான் என்று அவர்கள் எண்ணிக் கவலையடைந்த மாதிரித் தெரியவில்லை. மாறாக ஆயிரக்கணக்கானவர்களை எமது பிள்ளைகளாக்கிக் கொண்டோம் என்ற பெருமை தெரிந்தது.

''தம்பி எங்களை கௌரவிச்சீங்கள் - எங்களுக்கு பூரண திருப்தி. - ஆனால் நாங்கள் போராட்டத்திலிருந்து எட்டி நிற்பவர்கள் அல்ல. நாங்களும் போராட்டத்துடன்தான் நிற்கிறோம். அடுத்து செய்ய வேண்டியது போராட்டத்திலிருந்து எட்டி நிற்பவர்களை உள்ளே இழுத்தெடுப்பது தான். இன்றும் இது எமக்கு

*கைதிகளின் பெற்றோராக சந்தித்த பலர் மீண்டும் சந்தித்துக் கொண்டனர் மாவீரர்களின் பெற்றோர்களாக.*

பல இடங்களிலும் மாவீரர்களின் பெற்றோர் சந்தோஷமாக ஒருவரோடொருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குள் ஓர் புதிய உறவு பிறந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஏனோ 88ஆம் ஆண்டு நினைவுகள் வந்தன. 88ஆம் ஆண்டில் வருடப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல், கிறிஸ்மஸ் போன்ற பண்டிகை நாட்களில் இந்திய முகாமுக்கு முன்னால் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கும். அந்தவிசேட தினங்களில் தங்கள் பிள்ளைகளைப் பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கானோர் வருவார்கள். காலை 7 மணிக்கு வந்தவர்கள் மாலை 6மணி வரை கியூவில் நின்று தமது பிள்ளைகளைப் பார்வையிடுவர். அப்போது பெற்றோர்கள் தமக்கிடையே உரையாடிக்கொள்வதுண்டு. சோகம் படிந்த சூழலிலும் நட்புப் பிறந்தது. அன்று கைதிகளின் பெற்றோராக சந்தித்த பலர் நேற்று முன்தினம் மாவீரர்களின் பெற்றோராகச் சந்தித்துக்கொண்டனர். ஹீரோராஜ், ஜிம்கெலி, சாளி, அம்பி, வினோத், வக்கீல்...... இப்படியே பல முன்னாள் கைதிகளின் பெற்றோர் மாவீரர்களின் பெற்றோராகச் சந்தித்துக்கொண்டனர்.

மாவீரர்களின்பெற்றோரை ஓய்வாக இருக்கச் செய்து போராளிகள் உபசரித்தனர். எனக்கு அப்போது இந்திய இராணுவ காலம் நினைவுக்கு வந்தது. இந்த மாவீரர்களின் பெற்றோர் இந்திய இராணுவத்தின் காலத்தில் போராளிகளுக்கு புகலிடம் கொடுத்து அவர்களை உபசரித்தவர்கள் காலமெல்லாம் போராளிகளை உபசரித்தவர்களை போராளிகள் இன்று தாம் உபசரித்தார்கள். அன்று காயமடைந்த, நோய்வாய்ப்பட்ட பல போராளிகளை இப்பெற்றோர் அக்கறையுடன் கவனித்தார்கள். அதேபோல் இங்கு தங்க வைக்கப்பட்ட பெற்றோருக்காக ஒரு முதலுதவி

சம்பந்தமில்லாத விடயம் மாதிரி பலர் நடந்துகொள்வதும் பவுண் கொடுக்காமல் காய்வெட்டுவதும், அகதிகளாக ஓடித் தப்ப முனைவதும்... இவர்களை எப்படியாவது பங்காளராக்க வேண்டும். அதில் தான் போராட்டத்தின் முழுவெற்றியும் தங்கியுள்ளது என்றார்''

சிரித்தபடியே அந்த மாவீரரின் தந்தையிடம் மன்னிக்கவும் போராளியிடம் விடைபெற்றுக்கொண்டேன்.

### நாளை தொடரும்

''உதிக்கும் திசைநோக்கி உன்னத பயணம்'' நாளை வெளிவரும்.

## மைதானத்திற்கு மாவீரர் பெயர்

மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி விளையாட்டுமைதானத்திற்கு கப்டன் குழந்தையின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. முன்னாள் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளராகிய கப்டன் குழந்தை (நகுலேஸ்வரன்) சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் விளையாட்டுத் துறையில்அதிக ஆர்வமும் ஈடுபாடும் உடையவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கருணாநிதி சந்திரசேகர் சந்திப்பு

(மதுரை)

முதலமைச்சர் மு. கருணாநிதி மார்கழி மாதம் முதல் வாரத்தில் பிரதமர் எஸ். சந்திரசேகரை டெல்லியில் சந்திக்கவுள்ளார். இத்தகவலை மு. கருணாநிதி மதுரையில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் வெளியிட்டார்.

வளைகுடாவில் போர் நிகழ்ந்தால்

# அமெரிக்கத்தரப்பிலும் சேதம் உயர்ந்தளவில் ஏற்படும்

(சிட்னி)

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அமெரிக்கத்தரப்பிலும் கணிசமான இழப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சுமார் 25,000 ஈராக்கிய படைகள் இப்போரில் மரணமடையும் எனக் கணக்கிட்டால் குறைந்தது 10,000 அமெரிக்கத் துருப்புக்களும் உயிர் இழக்கும் அபாயம் உண்டு இவ்வாறு அவுஸ்திரேலியா வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில் அமெரிக்க இராணுவத்தளபதி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை வளைகுடாவில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்கப் படைகளில் 49 பேர் விபத்துக்களினால் உயிர் இழந்துள்ளனர். வாகனங்களில் இருந்து தவறிவிழுந்தும், ஹெலிகொப்டர் விபத்துக்களினாலும் இந்தஉயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். இதைவிட 400 படையினர் பாம்பு போன்ற விசஜந்துக்களால் தீண்டப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வைத்திய ஒழுங்குகளை வளைகுடாவில் தரித்து நிற்கும் ஜேர்மன் துருப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன. பாலைவன சீதோஷ்ண நிலை அமெரிக்கத் துருப்புக்களுக்கு பழக்கமில்லாததால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்றும் அப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரிட்டனின் புதிய பிரதமராக ஜோன்மேஜர் பதவியேற்பு

(லண்டன்)

இங்கிலாந்தின் பிரதமராக நேற்று ஜோன் மேஜர் பதவி ஏற்றார். இங்கிலாந்தின் ஆளும் கடசியான கன்சர்வேட்டிவ் கட்சியில் பிரதமர் தெரிவுக்காக நடந்த வாக்கெடுப்பில் 47 வயதான நிதி அமைச்சர் ஜோன் மேஜர் முன்னாள்பாதுகாப்பு அமைச்சரான மைக்கேல் ஹெசட்ரயினை 54 வாக்குகளால் தோற்கடித்தார்.

மூன்று தடவைகள் இங்கிலாந்தின் பிரதமராக இருந்து தேர்தல் முதற்சுற்றுப்போட்டியில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காமையால் மாக்கிரட்தட்சர் தனது பதவியில் இருந்து விலகியிருந்தார். வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற ஜோன் மேஜர் நேற்று இங்கிலாந்து மகாராணியைச் சந்தித்த பிறகு இங்கிலாந்தின் பிரதமராக பதவி ஏற்றார்.

குடாநாட்டில்

நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் மாதகல் சென். தோமஸ் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற மாவீரர்நாள் இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெருந்தொகையான மக்கள்மீது சீ-பிளேனில் இருந்து மேற்கொள்ளடபட்ட றேசர்க்குண்டுத் தாக்குதலால் திருமதி தேவரட்ணம் (வயது 45) தே. ஐக்இனேஸ் (வயது 40) இவரது மகன் கிளைற்றன் (வயது 8) அ. யூடி ஜில்ஸ்கா (வயது 17) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலால் சிதறியோடிய பொதுமக்களின் கால்களிற்கிடையில் அகப்பட்ட ச. வனிதா (வயது 20) என்பவரின் இரண்டு கைகளும் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென். தோமஸ் பாடசாலைக் கட்டடங்களும், தேவாலய அறையும், மடமும் இந்த தாக்குதலால் சேதமடைந்தன.

வடமராட்சி

பருத்தித்துறை வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று மாலை சீ-பிளேன் சுட்டதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமாலை 6-30 மணிக்கு அப் பகுதியை வட்டமிட்ட சீ-பிளேன் சுட்டதில் வல்வெட்டித்துறையில் ஒரு பெண்ணும், கற்கோவளம் பகுதியில் ஒரு ஆணும் படுகாயமடைந்து அவசர சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி

பதினொன்று முப்பது மணியிலிருந்து நடுநிசிவரை தென்மராட்சிப்பகுதிஎங்கும் நேற்று முன்தினம் இரவு கடுமையான கலிபர் தாக்குதலை சீ-பிளேன் மேற்கொண்டது. இந்தத் தாக்குதலால் தென்மராட்சிப் பகுதி பரவலாக பதட்டமடைந்தது. கல்வயல், மட்டுவில் ஆகிய பகுதிகளிலும் கொடிகாமத்திலும் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

வேலணை

வேலணையில் பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது சீ - பிளேன் கலிபர் தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இப்பகுதியில் பல முறை வட்டமிட்ட விமானம் சரமாரியாக கலிபர் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் சா. திருமாறன் (வயது 16), வ. வித்தகன் (வயது 16) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

இதேதினம் ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி, மாதகல், பண்டத்தரிப்பு அரியாலை, செம்மணி ஆகிய பகுதிகளிலும் இவ்விமானம் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

(க)(ச)(85)(35)(82)

கொழும்பில்

இவர்களது இந்த விண்ணப்பக் கோரிக்கைகள் யாவும் மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தயார் செய்யப்பட்ட பரீட்சையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சான்றிதழ்களுமே வழங்கப்பட உள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வைக்கப்பட இருக்கும் பரீட்சைக்கான வினாத் தாள்கள் யாவும் தயார் செய்யப்பட்டு கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வட பகுதி மாணவர்கள் தங்கி உள்ள பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் நடாத்தப்படும் என தெரிய வருகிறது. (லோ)

பலாலி

ருந்த விமன் காமத்தைச் சேர்ந்த அலோசியஸ் (45) அவரது மனைவி பிலோமினா (40), ஜெகநாதன் (41) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இவ் ஆலயமும், அதன் மதிலும் பலத்த சேதமடைந்துள்ளன. இம் முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியிருந்தனர். இத் தாக்குதலைத் தொடர்ந்து இவர்கள் வேறு ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுதன் பேக்கரியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இ. பாலகுமார் (27), ரவிச்சந்திரன் (26), ராஜ் (26) ஆகியோர் படுகாயமடைந்தனர். இந்த பேக்கரியும் பலத்த சேதமடைந்துள்ளது.

முத்துக்கிருஷ்ணர் வீதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் திருமதி ஜெகஜோதி (45), அவரது மகள் ஜெயபானு (16), சி. சாந்தி (30) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களது வீடும் பலத்த சேதமடைந்தது.

சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இளவரசி, அம்பாள் புடவை நிலையமும், குருஸ் அக்ரோ சென்ரரும் பலத்தசேதமடைந்தன. இவற்றுடன் ஆலய வீதியில் அந்தோனிப்பிள்ளை, சூசைப்பிள்ளை ஆகியோரின் வீடும் மாணிக்க தியாகராஜ பண்டிதர் வீதியிலுள்ள தேவசகாயம், சபாநாதன், ரகுரஞ்சன், பத்மநாதன் ஆகியோரின் வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன. இதில் பத்மநாதனின் வீடும் வைத்திய நிலையமும் கடந்த மாதம் பொம்மர் தாக்குதலால் ஏற்கனவே சேதமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் சேதமடைந்த கடைகளில் ஓடிக் கொண்டிருந்த கடிகாரங்கள் 8.13 மணியுடன் செயலிழந்துள்ளன. (ச), (83)

## யாழ்.பல்க. விவசாயபீடத்தை துணைவேந்தர் திறப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (1990. 12. 02) மாலை 4 00 மணிக்கு சம்பிரதாயபூர்வ வைபவம் கிளிநொச்சியில் இடம்பெற உள்ளது.

இதனால் விவசாய பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சி இரணைமடுச்சந்திக்கு சமீபமாக இருக்கும் விவசாய பயிற்சி நிலையத்திற்கு சமுகமளித்துப் பீடாதிபதியைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் டிசம்பர் முதலாம் திகதி சனிக்கிழமை தொடக்கம் கிளிநொச்சியில் மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்யப்பட்டிருப்பதாகவும், நவம்பர் 30ந் திகதி வெள்ளிக் கிழமை தொடக்கம் விவசாய பீட அலுவலகம் கிளிநொச்சியில் மேற்படி விவசாய பயிற்சி நிலையத்தில் செயற்படுமெனவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

வங்காலை - பள்ளிமுனை

## தேவாலயங்களில் கொள்ளை குடிமனைகளில் தேடுதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலை, பள்ளிமுனை ஆகிய கிராமங்களில் இருக்கும் கிறிஸ்தவ தேவாலயங்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினராலும், சிறிலங்கா இராணுவத்தினராலும் கொள்ளையிடப்பட்டுச் சேதமாக்கப்பட்டதாக தெரிகின்றது. தேவாலயங்களிலிருந்த பெறுமதியான பொருள்களையும், தங்க நகைகளையும் கொள்ளையிட்ட படையினர் தளபாடங்களைச் சேதமாக்கியதாகவும், குடிமனைகளில் தேடுதல் நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

கீரிமலை

துறை திஸ்ஸ விகாரையில் இருந்து இவ் ஆலயத்தின் மீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆலயம் கடந்த மாதம் பொம்மர் தாக்குதலால் தரை மட்டமாகி இருந்தது. இந்த மணிக்கோபுரம் மட்டுமே தாக்குதலிலிருந்து தப்பியது குறிப்பிடத்தக்கது. (ச)

ஒட்டுசுட்டானில்

(வயது 21) ஒட்டுசுட்டான் ஆகியோர் மரணமடைந்தனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதிகளில் நேற்று முன்தினம் முழுவதும் அகோரமான விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றுள்ளது இது பற்றி மேலும் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் காலை ஒன்பது மணி தொடக்கம் பதினொரு மணிவரை பல கிராமங்களிலும் விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

சாத்திரி கூழாங்குளம், நொச்சிமோட்டை, பூந்தோட்டம், மாறம்பைக் குளம், காத்தார் சின்னக்குளம், நெளுக்குளம், பேயாடி கூழாங்குளம். விளக்கு வைத்தகுளம் ஆகிய இடங்கள் இவ் விமானத் தாக்குதலால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் பாதுகாப்பிற்காக இடம் பெயர்ந்துள்ளன.

புலிகள்

பட்ட மோசமான வானிலை காரணமாக முகாமில் இருந்த இராணுவத்தினருக்கும் விமானப்படையினருக்கும் தொடர்பு இல்லாமல்போய்விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில், முகாமை விட்டு இராணுவத்தினர் மூன்று பிரிவாக வெளியேறிவிட்டதாகவும், இதில் ஒரு பிரிவினர் மீட்கப்பட்டதாகவும், மற்றைய இரு பிரிவினருடனும் தொடர்பு ஏற்பட்டுவிட்டதாகவும், ஆனால் பாதுகாப்பு நிலைவரங்கள் காரணமாக அவர்கள் உள்ள இடங்கள் வெளியிடப்பட மாட்டாது எனவும் தெரிவித்த அமைச்சர் மீட்கப்பட்ட படையினர் எண்ணிக்கைபற்றியோ, அல்லது வவுனியா வந்து சேர்ந்ததாகக் கூறப்பட்ட படையினர் எண்ணிக்கை பற்றியோ கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

போராளிகள்

களின் புகைப்படங்களை, உறவினர்கள் தந்து உதவுமாறு கண்காட்சியை ஒழுங்குசெய்த பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் கேட்டுள்ளது. (க)

## போட்டி பரீட்சை முடிவு திகதி நவம்பர் 30

(யாழ்ப்பாணம்)

கீழ்நிலையில் இருக்கும் இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 30ஆம் திகதி என அறிவிக்கப் பட்டுள்ளது. இப்போட்டிப் பரீட்சைகள் அந்தந்த மாவட்டங்களிலேயே நடாத்தப்படும்

(க)

சமாதானம்

பட ஐம்பதுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ சமயப் பிரபலஸ்தார்கள் கைச்சாத்திட்ட அந்த கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சிறிலங்காவில் வடக்கிலும், கிழக்கிலும் நெருக்கடி மோசமடைந்துவருவதையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். சமாதானத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடுபவர்களும், அப்பாவிக் குடிமக்களும் கொல்லப்படுவதையிட்டு நாம் கவலையடைந்துள்ளோம். ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அகதிகளும் தமிழ்நாடு வந்துள்ளார்கள். தமிழ்நாட்டு அரசும், மத்திய அரசாங்கமும் இந்த பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் தராது இருப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

நல்லெண்ணம் மிக்க கிறிஸ்தவர்களுக்கு ஒரு அவசரக் கோரிக்கை என்ற அந்த ஆவணத்தில் மக்களின் மேல் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையினால் வரலாற்றில் இந்தச் சவாலுக்கு முகம்கொடுத்து மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும், சிறிலங்கா, இந்திய அரசாங்கங்களுக்கும் இந்த வேண்டுகோளை முன்வைக்கிறோம்.

தங்கம்

வைத்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான திரு. தேவர், திரு பேபி அண்ணா, கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

அதேவேளை மாவீரர் தினத்தன்று மண்மீட்பு நிதிக்குப் பெறப்பட்ட கடன்கள் நூறு பேருக்கு மீளளிப்புச் செய்யப் பட்டன. (க)


# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை செல்வரெத்தினம்

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கல்வியங்காடு, சேர்ச் லேனில் வசிப்பவருமாகிய சங்கரப்பிள்ளை செல்வரெத்தினம் மதவாச்சியில் அகால மரணமானார். இவர் யாழ்ப்பாணம் சிங்கம் இன்டஸ்றீஸ் பங்காளரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை காமாட்சி அவர்களின் புதல்வனும், தியாகேஸ்வரியின் அன்புக்கணவரும், அனித்தா, அருந்தாவின் அருமைத் தந்தையும், செல்லம்மா, மகேஸ்வரி, காராளசிங்கம் ஆகியோரின் சகோதரரும், பரராசசிங்கம், பத்மநாதன், யோகாம்பிகை, ஜெயராஜா, பாலராஜா, யோகராஜா, விக்கினராஜா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் அநுராதபுரத்தில் இன்று 29 - 11 - 90 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

''அன்னை இல்லம்''
சேர்ச்லேன்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச. காராளசிங்கம்
(சிங்கம் இன்டஸ்றீஸ்)
யாழ்ப்பாணம்,

(F/1)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் லக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.